# அவசர கூட்டப்பொருட்கள்

1. இம்மாநகராட்சி பகுதிகளில் குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகள், பாதாள சாக்கடை திட்டம் மற்றும் இயற்கை இடர்பாட்டினால் சேதமடைந்த சாலைகளை சீரமைத்திட தமிழ்நாடு நகர்புற சாலைகள் அபிவிருத்தி திட்டம் (TURIP) 2020-2021-ன் கீழ் 23 பணிகள் தேர்வு செய்யப்பட்டு, கீழ்கண்டவாறு 2 சிப்பங்களாக ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு அனுப்பிட மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

| | | |
|---|---|---|
| 1 | வார்டு எண்.1 கட்டையன்விளை சாலை, வார்டு எண்.7 புளியடி சாலை வார்டு எண்.9 ஆராட்சி ரோடு, வார்டு எண்.18 வையாலிவிளை சந்தி தெரு, வார்டு எண்.19, லாலா விளை சாலை, வார்டு எண்.22 ஞானம் காலனி, வார்டு எண்.25, நடுகாட்டு இசக்கியம்மன் சாலை, வார்டு எண்.25 ஜோ டேனியல் தெரு, வார்டு எண்.26 கிறிஸ்து நகர் மெயின் சாலை மற்றும் வார்டு எண்.49 தட்டான்விளை சாலை ஆகிய பகுதிகளில் தார்தளம் அமைக்கும் பணி-சிப்பம்1 | 225.00 |
| 2 | வார்டு எண்.20 CTM Puram சாலை, வார்டு எண்.38 வேதநகர் முதல் வட்டவிளை சாலை, சிவன் தெரு மற்றும் ஸ்ரீகிருஷ்ணா சாலை, வார்டு எண்.39, பட்டகசாலியன் முதல் கலை நகர், அல்போன்ஷா கார்டன், கலைநகர் புது தெரு, வார்டு எண்.40 வட்டக்கரை சாலை, வார்டு எண்.42 ஹவுசிங் போர்டு காலனி சாலை, வார்டு எண்.43 சைமன் நகர் சாலை, வார்டு எண்.44 ஜேக்கப் தெரு, வார்டு எண்.48 சரலூர் முதல் DVD காலனி சாலை மற்றும் வார்டு எண்.42 50 பொன்னப்பநாடார் காலனி ஆகிய பகுதிகளில் தார்தளம் அமைக்கும் பணி-சிப்பம்2 | 275.00 |
| | மொத்தம் | 500.00 |

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.4007/2020/இ3

**தீர்மானம் எண்.307 – அங்கீகரிக்கப்பட்டது**

2. நாகர்கோவில் மாநகராட்சியில் தூய்மை இந்தியா இயக்கம் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2015-2016-ன் கீழ் அனுமதிக்கப்பட்ட தொகையான ரூ.445.80 இலட்சத்தில் ரூ.318.58 இலட்சம் செலவீனம் போக மீதமுள்ள தொகையில் ரூ.127.22 இலட்சத்திற்கு 70 எண்ணம் BOV வாங்கிட நகர்மன்ற தீர்மானம் எண்.29 நாள்.31.01.2020-ன் படி ஒப்புதல் பெறப்பட்டது. பின்னர் நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அலுவலக ந.க.எண்.2941/2020/P3 நாள்.03.06.2020-ன் படி மேற்படி மீதமுள்ள தொகைக்கு தற்சமயம் அமுலில் உள்ள சுற்றுசூழல் தன்மை அடிப்படையில் இலகுரக வாகனங்கள் (BS 6 (VI) Model) வாங்கிட அறிவுறுத்தப்பட்டது.

அதனடிப்படையில் மீதமுள்ள தொகையில் ரூ.127.22 இலட்சத்திற்கு 17 எண்ணம் இலகுரக வாகனங்கள் (BS (VI)6Model) வாங்கிட மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.1022/2020/இ3

**தீர்மானம் எண்.308 – அங்கீகரிக்கப்பட்டது**